بسم الله الرحمن الرحيم

**FRIDAY SERMON**

**வெள்ளிக்கிழமை குத்துஃபா** 11-04-2014

*(10 Jamad'ul Akhir 1435 Hijri)*

# Advent of A God's Messenger is Essential for this Era

# ஒரு இறைதூதரின் வருகை இக்காலகட்டத்தில் அவசியம்

## *Hazrat Halifathullah Munir Ahmad Azim (A)*

உலக மக்களுக்கு அனைத்தும் சமாதான வாழ்த்துக்கள் தெரிவித்த பிறகு, கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீத்தும் தஅவ்வுசும் சூராஃபாத்திஹாவும் ஓதி கீழ் வருமாறு கூறினார்.

இந்த நூற்றாண்டின் தேவையான கட்டத்தில் ஹஸ்ரத் முஹமது முஸ்தபா (ஸ) வுடையவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அ) முடையவும் வழியை பின்பற்றுகின்ற ஒரு ஜமாஅத்தாக அல்லாஹ் என்னை எழுப்பியிருக்கின்றான். இஸ்லாமை பாதுகாப்பதற்கும் அநீதிக்கு எதிராக போராடுவதற்கும் அம்முஸ்லீம்களின் கேள்விகளுக்கு திருப்தி வாய்ந்த பதிலளிப்பதற்குமாக ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமுமாக இந்த எளியவனை அல்லாஹ் நியமித்துள்ளான். அவ்வாறு, நான் அல்லாஹ்வின் கலீஃபா (இறைபிரதிநிதி) என்றும் முஹ்யித்தீன் (மார்க்கத்துக்கு மறுவாழ்வு கொடுப்பவன்) என்றும் வாதம் செய்திருக்கின்றேன். இதைகேட்டு எனது எதிராளிகளும் நயவஞ்சகர்களும் கடும் குணமுடையவர்களாக மாறியது மட்டுமல்லாமல் அதன் சீமையை தாண்டி சென்றிருக்கின்றார்கள். அவர்கள் என் மீது பலதரமான அவதூறுகள் எழுப்புகின்றன. போதை மருந்து பயன்படுத்துகின்றவன், மந்திரவாதி, குழப்பக்காரன், நாய், பன்றி என்று துவங்கிய பல பெயர்களும் அவர்கள் எனக்கு வழங்கியிருக்கின்றார்கள். மட்டுமின்றி எனது பகைவர்கள் எனக்கு எதிராக ஒரு ‘‘பத்துவா’’வும் விடுவித்துள்ளன. அவன் காபீர் என்றும் பொய் நபியென்றும் அதில் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். **அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே மேலும் அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே.**

இதில் அற்புதம் வாய்ந்த ஒன்றும் என்னால் காணயியலவில்லை. ஏனெனில் இறை தூதர்களிடத்தில் கடந்த கால மக்களும் இவ்வாறே நடந்திருக்கின்றார்கள். அவர்களின் உண்மை நிலையை புரிந்து கொள்ள சற்றுகால தாமதம் வேண்டும். எனக்கு எதிராக அவர்கள் விடுவித்திருக்கின்ற ‘‘குபர் பத்துவா’’ வை பற்றி நான் கூற விரும்புகின்றது இவ்வாறாகும். இதை ஒன்றும் நான் ஒரு விஷயமாக எண்ணவில்லை. அதை போன்றே அவர்கள் எனக்கு சூட்டியிருக்கின்ற தீயபெயர்களுக்கும் நான் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மக்கள் செய்கின்ற இச்செயல்கள் மூலமாக அவர்கள் தங்களுடைய ஆன்மாவுக்கே தீங்கு விளைவிக்கின்றார்கள். இது காரணமாக அல்லாஹ் தேர்ந்தெடுத்திருக்கின்ற அவனது நல்லடியானுக்கு ஒரு குறையும் ஏற்படுவதில்லை. அவர்கள் எவ்வளவு ஆற்றல்களுடன் என்னை துன்புறுத்துகின்றார்களோ அவ்வளவு அல்லாஹ் அவனது தீனுக்காக என்னை பயன்படுத்துகின்றான் என்று பொருள். அதாவது ஹஸ்ரத் முஹமது முஸ்தபா (ஸ) வுடையவும்

ஹஸ்ரத் அஹ்மது (அ) முடையவும் திருகுர் ஆனுடையவும் உண்மையை இப்பாரினில் நிலைநாட்ட அல்லாஹ் இந்த எளியவன் மூலமாக நாடுகின்றான் என்று சுருக்கம். அல்லாஹ்வின் கரங்களின்பால் இருப்பதை ஏற்றுக்கொண்டிருப்பவன் மட்டுமே நான். இந்த எளியவனை பயன்படுத்தி அல்லாஹ் என்ன விரும்புகின்றானோ அதை செய்கின்றான். அல்லாஹ் அவனது தூது செய்தியை எட்டவைப்பதற்காக அவனே ஒருவரை தேர்ந்தெடுக்கின்றான். அப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவன் முழுமையாக தேர்வு செய்தவனுடையது மட்டுமாகின்றான். அவனது விருப்பத்திற்கு ஏற்றவார் செயல்படுகின்றான். அச்செயல்கள் யாவும் அல்லாஹ்வின் அனுமதிக்கும் வேண்டுகோளுக்கும் உட்பட்டிருக்கும். அனைத்து வகைகளுடையவும் அளவுகோல் அல்லாஹ்வின் கரங்களிலாகும். ஒவ்வொரு உயிரினங்களுக்கும் ஒவ்வொரு வேலை செய்து முடிப்பதற்கு உண்டு. அதை போலவே ஆகும் அல்லாஹ்வின் மனிதர்களான தூதர்களுக்கும் அவனது மலக்குகளான தூதர்களுக்கும்.

**அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கு**, இன்றைய வெள்ளிக்கிழமை குத்துஃபாவிலும் வருகின்ற வெள்ளிகிழமை குத்துஃபாவிலும் **இன்ஷா அல்லாஹ்** இஸ்லாமின் மகத்துவத்தைக் குறித்தும் அதன் தீர்க்கதரிசன வெளிப்பாடுகளை குறித்தும் மலக்குகளுடையவும் அவர்களின் செயல்களை குறித்தும் விளக்கமளிக்க நான் விரும்புகின்றேன்.

நவீன தத்துவசிந்தனைகளில் முழுகி, இஸ்லாமின் போதனைகளை விமர்சனம் செய்கின்றோர்களுக்கு நான் ஒரு பதிலளிக்க எண்ணுகின்றேன். அதனால் நல்ல ஒரு முஸ்லீமாக மாற நமக்கு எவ்வாறு இயலும் என்பதைக் குறித்து சிந்திக்க வேண்டியதாகும். ஒரு ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ எப்படி அந்நிலையை எட்ட முடியும் என்பதை யோசிக்க வேண்டும். இஸ்லாம் உயிருள்ள மார்க்கமே ஆகும். அது முஸ்லீம்களுக்கு உறுதியளிக்கின்ற ஒரு விஷயம் இஸ்லாமின் வெற்றிநாள்கள் உங்கள் கரங்களில் தான் என்று.

உண்மையைத் தேடுகின்ற ஏராளமான மக்களை இவ்வுலகில் காணலாம். இஸ்லாமை ஏற்றுக்கொள்கின்ற நிமிடம் முதல் அவர்கள் மீது அல்லாஹ்வின் அருள்கொடைகள் இறங்குகின்றது. அது வழியாக, ஆன்மீக அளவிலும், பௌதீக அளவிலும் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தின்பால் பாய்ந்து செல்கின்றது. இஸ்லாம் கூறுகின்றதும் நம்மை அழைக்கின்றதுமான கருத்திற்கும் கொள்கைக்கும் ஏற்றவார் வாழ்ந்து காட்ட முதல் கட்டத்தில் மிக வருத்தம் நிறைந்ததாகவும், கடினமானதாகவும் இருக்கும் என்பது நிரூபணமாகி விட்டவிஷயமேயாகும். தியாகங்களுக்கு ஆயத்தம் கொள்ளாமல் எதையும் வென்றிட இயலாது. நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவோரின் நம்பிக்கையை செயல்களாகின்ற கல்களின் மீது வைத்து மாற்றுரைத்துப் பார்த்ததற்கு பிறகே வெற்றியை உறுதிப்படுத்துவது. கறையற்ற முயற்சிகளும் நல்லெண்ணவும் நம்பிக்கையை முழுமைப்பெற செய்ய அவசியமாகும்.

உங்கள் அனைவரையும் அழைக்க அல்லாஹ் என்னை நியோகித்துள்ளான். ஆகவே எல்லா முப்திமார்களையும், மௌலவிகளையும், பகைவர்களையும், நயவஞ்சகர்களையும், தீயபெயர்கள் சூட்டி என்னை ஆட்சேபித்த அனைவரையும் நான் அல்லாஹ்வின் பால் அழைக்கின்றேன். அவர்களுக்கு ஏற்பட்ட சிறு சந்தேகத்தின் அடிப்படையிலும் கருத்து வேற்றுமையின் காரணத்தாலுமாகும் இவ்வாறு நடந்து கொண்டதும் என்னை முழுமையாக வெறுத்து ஒதுக்கிக் கொண்டதும். எனது வாதத்தை குறித்து புரிந்து கொள்ள அவர்களுக்கு இயலவில்லை. ஆகவே, நான் அவர்களிடம் கூறுகின்றேன், உண்மை ஏது? பொய்மை ஏது? என்று பகுத்தறிந்து கொள்ள விரும்புகின்றீர்கள் என்றால் நீங்கள் பயபக்தியோடும் தூய உள்ளத்தோடும் அல்லாஹ்விடத்தில் ''துஆ'' செய்யுங்கள். என்னை ஏற்றுக்கொண்டோர்களுக்கு நிச்சயமாக எனக்கு உறுதி அளிக்க முடியும். அதை போன்றே இந்த எளியவனை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ என்று சிந்தித்துக் கொள்கின்றார்கள் அல்லது, எதிர்காலத்தில் ஏற்றுக்கொள்கின்றோர்கள், அவர்களுடைய இறுதியும் கண்டிப்பாக அருள் நிறைந்தாக இருக்கும். அவர்கள் ஒரு பொழுதும் ஒன்றும் நஷ்டமடையமாட்டார்கள்.

இவ்வுல வாழ்க்கை அர்ப்பமானதே ஆகும். ஆனால் உண்மையான அறுகொடை, உண்மையான பிரதிபலன், உண்மையான முன்னேற்றம், உண்மையான லாபம், என்றென்றும் நிலைநிற்பதே ஆகும். அதுவே அல்லாஹ் உங்களுக்கு வழங்குவது. அது இன்மையில் மட்டுமின்றி நாளை மறுமையிலும் கிடைத்துவிடும். அந்த அருள்கொடைகளுக்கு முடிவேயில்லை. அங்கு நீங்கள் அமைதியோடும், ஒற்றுமையோடும் வாழ்ந்து கொள்வீர்கள். அவர்களே ஆவார்கள் அல்லாஹ்வின் உண்மையான அடியார்கள்.

ஏதேனும் ஒரு வெளிப்பாடு மதத்தில் நம்புகின்றோர்களுக்கு, இவ்வுலகின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு கட்டங்களில், பல்வேறு நபிமார்களை அல்லாஹ் தோற்றுவித்தான் என்று நம்பிக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். இறைதூதர்கள் தோன்றாமல் ஒரு நாடும் இவ்வுலகில் இல்லை. 13 லட்சம் மக்கள் மட்டும் வாழுகின்ற சிறு தீவான மௌரிஷீயாவிலும் அல்லாஹ் அவனது கலீஃபாவை நியமித்து அவனது அருள் கொடைகளை இறக்கசெய்திருக்கின்றான். கடந்த நூற்றாண்டில் அவதரித்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அ) அவர்களை ஏற்றுக்கொண்ட மூன்றாவது இராஜியமாகும் மௌரீஷியஸ். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் பிறகு 1915-ல் அஹ்மதியா முஸ்லீம் மிஷன் மௌரீஷியஸில் அமைக்கப்பட்டது. முக்கியத்துவம் வாய்ந்த உலகமதங்களின் சங்கம பூமியே ஆகும் மௌரீஷியஸ் என்ற இந்த சிறு நாடு.

மனுகுலத்தில் உட்படுகின்ற, பல்வேறு நாட்டில் வாழுகின்றவர்களுமான அனைத்து மக்களுக்கும் ஆன்மீகம் அவசியமானதேயாகும். அவர்கள் பார்வையிடும்போது இருளின்றி மற்றெதுவும் காணயியலாமல் இருக்கும் போது, அல்லாஹ்வே நேரடியாக தேர்ந்தெடுத்து நியமிக்கின்ற ஒரு தூதரின் தேவை, அல்லது தூய ஒளி அவர்களுக்கும் அவசியமல்லவா? திருமறை திட்டவட்டமாக கூறுகின்றது. **“ஒரு எச்சரிக்கையாளரை அனுப்பப்படாத எந்த ஒரு மக்களும் இல்லை”.** நபிமார்களை அல்லாஹ் நியோகிப்பது எதற்காக? இதை புரிந்துகொள்ள முன்வருகின்றோர்களுக்கு ஒரு உண்மை புலனாகிவிடும். அதாவது, மக்கள் ஆன்மீகமாக பார்வையற்றவர்களாக மாறுகின்ற போது நபிமார்கள் தோன்றுகின்றன. இறைவனுடன் நேரில் தொடர்புகொள்வதற்கான எல்லா வழிகளும் அடைந்து விடும்போது மனிதகுலத்தில் இருந்து இறைதூதர்கள் எழும்புகின்றார்கள். நீண்டகாலமாக வறண்டு கிடக்கின்ற பூமிக்கு திடீரென உயிர்கொடுப்பதற்கான ஒரு நடைமுறை என்ற நிலையில் பாரம்வாய்ந்த கார்மேகங்கள் உருண்டு கூடுவதும் அதன் விளைவாக மழைதோன்றுவதும். இதுபோன்றேயாகும் நபிமார்களின் தோற்றவும்.

கடந்த காலங்களில் நபிமார்கள் வருகை தந்திருந்தது போன்றே வருங்காலங்களிலும் இறைதூதர்கள் அவதரித்துக் கொண்டிருப்பார்கள். அதற்கு முடிவில்லை. தூயவெளிப்பாடுகளின் வாசல் என்றென்றும் திறந்தே இருக்கும். கடந்த காலங்களில் அது திறந்திருந்தது போன்றே இனிவரும் காலங்களிலும் திறந்தேயிருக்கும். இதுவே நமது நம்பிக்கை. நவீன உலகம் ஒரு நபியின் தேவையை நோக்கி செல்கின்றது. இறுதிகாலத்திற்காக வாக்குறுதி செய்யப்பட்ட மஹாத்மாக்களில் ஒருவரின் வருகை எல்லா நிலையிலும் அவசியமானதாகும். நமது நம்பிக்கைக்கு அடிப்படையாக இருப்பது, இந்நூற்றாண்டின் தூயவெளிப்பாடுகள் மட்டுமின்றி கடந்த கால நபிமார்களின் சாட்சிமொழிகளும் அதற்கு தெளிவாகும். என்னை முஹ்யத்தீனாக அல்லாஹ் நியமித்ததற்கு பிறகு என்னிடத்தில் அவன் ஒப்படைத்திருக்கும் பொறுப்பு, இறைபக்தியும், இறைநேசவும் மக்கள் உள்ளங்களில் வலுவாக உறுதிப்படுத்த வேண்டும் என்பதாகும். மற்றொன்று, மனிதகுலம் மறந்துப்போன ஆன்மீக உண்மைகளை அவர்களுக்கு தற்பிக்கவும், ஒளிநிறைந்ததும், தூய்மை வாய்ந்ததுமான ஏக இறை வணக்கம் அவர்களின் இதயங்களில் நிரந்தரமானதாக அமைக்கவும், அவர்களின் உள்ளங்களில் இருந்து இறைபங்காளிகளை முற்றிலும் அழித்துவிடவுமாகும்.

ஆன்மீகத்தைப் பற்றியும் இறைவனைக் குறித்தும் பேசக்கூடியவர்களை ஏராளமாக இன்று காணமுடியும். ஆனால் அவர்களின் உள்ளங்கள் பார்த்தால் அதில் பௌதீக நோக்கத்தையும், அன்பையும், தவிர்த்து வேறொன்றும் இருப்பதில்லை. இந்த உலகிற்கு இப்போது ஒரு மார்க்க வழிகாட்டியின் தேவை அவசியமானதாகும் என்ற விஷயத்தில் என்னை போன்றே உங்களுக்கும் கருத்து வேற்றுமை இருக்காது என்று நான் எண்ணுகின்றேன். அந்த மார்க்க வழிகாட்டி இறை உதவியும் இறை நோக்கவும் உள்ள நபராகவும், மனித குலத்தை அனைத்தும் நன்மையின்பால் வழிநடத்திக்கொள்ள திறமை வாய்ந்தவராகவும் இருக்க வேண்டும். அத்தோடு அந்நபர் மனிதனை சந்தேகத்தில் நின்று நம்பிக்கையின் பாலும் நிச்சயமில்லாய்மையில் நின்று திடநிச்சயத்தின்பாலும் எட்டவைக்க வேண்டும். மனுகுலத்திற்கு ஏதேனும் நேரத்தில் ஒரு நபியின் தேவை அவசியமானதாக இருந்திருப்பின், அவ்வாறே ஒரு நபியின் தேவை மிக அவசியமாகயிருக்கும் ஒரு காலகட்டமாகும் இது. மதம் என்பது அர்த்தமற்ற ஒரு பேச்சாக மட்டும் இன்று பரிணமித்துள்ளது. உண்மையின் நிலை இன்று பொய்மையை போன்றேயாகும். உலகின் சில பகுதிகளில் உண்மை ஆற்றல் இழந்து போன நிலையிலும். மற்று பகுதிகளில் உண்மை மரணத்தை தழுவிவிட்ட நிலையிலும் காணப்படுகின்றது.

இறைவனிடமிருந்து அவனது தூதன் தோன்றவேண்டிய அவசியமான காலமாகும் இது. உண்மையான இறைபாடங்களை பாரினில் நிலைநாட்டுவதற்கும், அதை இரட்சிப்பதற்கும், அத்தோடு கடந்தகால இறைதூதர்களுடையவும், சீர்திருத்தாளர்களுடையவும், இறை பிரதிநிதிகளுடையவும், மகத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் இந்த இறைச்செய்தியை தெளிவான முறையில் மக்களிடத்தில் எட்டவைப்பதற்கும் அல்லாஹ்விடம் இருந்து அவனது தூதன் தோன்ற வேண்டிய காலமே ஆகும் இது. எனக்கு முன் கடந்து சென்றவர்களை பொய்யரென முத்திரை குத்துவதற்கல்ல நான் தோன்றியிருப்பது. மாறாக, அவர்களின் வாதங்களை நிஜப்படுத்துவதற்கும் அதை நிலைநாட்டுவதற்கும் ஆகும் எனது வருகையின் நோக்கம். நிச்சயமாக அல்லாஹ் என்னை தோற்றுவித்திருப்பது கடந்த கால இறைதூதர்களின் உண்மையை நிரூபிப்பதற்கும் இறை தூதர்களின் ஆற்றல் வாய்ந்த தொடருக்கு வனப்பை அதிகரிப்பதற்கும் அத்தொடரில் நவீனமான முத்துமணிகள் இறுதி நாள் வரையிலும் தோன்றி கொண்டேயிருக்கும் என்ற நற்செய்தியை தெரியப்படுத்துவதற்கும் ஆகும். அவர்கள் அனைவரும் ஒருவர் மற்றொருவரை உண்மைப்படுத்துகின்றார்கள், சக்திப்படுத்துகின்றார்கள். ஒருவர் மற்றொருவருக்கு எதிராக இருப்பதில்லை. இறைவெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்று உரிமைகோருகின்ற ஒருவரை எளிதில் பகுத்தறிய இயலும் ஒரு வழியே ஆகும் இது.

நான் இந்த சொற்பொழிவை இங்கு நிறைவுப்படுத்துகின்றேன். **இன்ஷா அல்லாஹ்.** வருகின்ற வெள்ளிக்கிழமை இச்சொற்பொழிவை தொடர்ந்து ஆற்றுவேன். மனுகுலத்தை அல்லாஹ் இரட்சிப்பானாக. அல்லாஹ்வின் தூதர்களின் உண்மை ஒளியை தரிசிக்க கூடிய ஆற்றல் மக்களுக்கு அல்லாஹ் வழங்குவானாக. ஹஸ்ரத் முஹமது முஸ்தபா(ஸ) வின் உம்மத்தில் இருந்து இவ்வகையிலா சீர்திருத்தாளர்களை தோற்றுவித்து, அன்னாரின் மகத்துவத்தை இறுதிநாள் வரையிலும் நிலை நாட்டுவானாக. அல்லாஹ் அவனது தூதர்களிடத்தில் மேற்கொண்ட தூய உடன்படிக்கையை பாதுகாப்பானாக. உலக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஏக இறைவனை மட்டும் வணங்குவதில் மகிழ்ச்சி அடைவதற்கான வாய்ப்பு வழங்குவானாக. ஆமீன்.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ TamilNadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

Issued by R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832